(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. **84**.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2016 யூலை 08, வெள்ளிக்கிழமை மு.ப.10.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ கரு ஜயசூரிய,** சபாநாயகர்

**கௌரவ திலங்க சுமதிபால,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ ரணில் விக்கிரமசிங்க,** பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்

**கௌரவ (திருமதி) தலதா அதுகோரல,** வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சர்

**கௌரவ ஜோன் அமரதுங்க,** சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரும் காணி அமைச்சரும்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ கயந்த கருணாதிலக்க,** பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற் கோலாசானும்

**கௌரவ ரவி கருணாநாயக்க,** நிதி அமைச்சர்

**கௌரவ அகில விராஜ் காரியவசம்,** கல்வி அமைச்சர்

**கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,** உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

**கௌரவ மனோ கணேசன்,** தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர்

**கௌரவ தயா கமகே,** ஆரம்பக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ தயாசிறி ஜயசேகர,** விளையாட்டுத்துறை அமைச்சர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்

**கௌரவ பழனி திகாம்பரம்,** மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ நவின் திசாநாயக்க,** பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. திசாநாயக்க,** சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சர்

**கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,** வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சர்

**கௌரவ ஹரின் பர்னாந்து,** தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்

**கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,** விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்

**கௌரவ றிஸாட் பதியுதீன்,** கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்துமபண்டார,** பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா,** அனர்த்த முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ சாகல ரத்நாயக்க,** சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ அர்ஜுன ரணதுங்க,** துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க,** மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) விஜயதாஸ ராஜபக்ஷ,** நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்

**கௌரவ சந்திம வீரக்கொடி,** பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ மலிக் சமரவிக்ரம,** அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்

**கௌரவ விஜித் விஜயமுனி சொய்சா,** நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ டி.எம். சுவாமிநாதன்,** சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ரஊப் ஹகீம்,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர்

**கௌரவ பி. ஹரிசன்,** கிராமியப் பொருளாதார விவகாரங்கள் பற்றிய அமைச்சர்

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா,** பிரதேச அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் யாப்பா அபேவர்தன,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வசந்த அலுவிஹாரே,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரீ. பீ. ஏக்கநாயக்க,** காணி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியங்கர ஜயரத்ன,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டிலான் பெரேரா,** நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிரோஷன் பெரேரா,** தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. டி. பிரேமதாச,** கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) விஜயகலா மகேஸ்வரன்,** சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வீ.எஸ். இராதாகிருஷ்ணன்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ருவன் விஜேவர்தன,** பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ திலிப் வெதஆரச்சி,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரவீந்திர சமரவீர,** தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சுஜீவ சேனசிங்க,** சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் செனெவிரத்ன,** விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. எச். எம். பௌஸி,** தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லஸந்த அலகியவன்ன,** மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ பைஸால் காசிம்,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) அனோமா கமகே,** பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன,** வலுவாதார அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ எச்.ஆர். சாரதீ துஷ்மந்த,** நீதி பிரதி அமைச்சரும் புத்தசாசன பிரதி அமைச்சரும்

**கௌரவ மனுஷ நாணாயக்கார,** வெளிநாட்டு தொழில்வாய்ப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ கருணாரத்ன பரணவிதான,** பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

**கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,** பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ அஜித் பி. பெரேரா,** மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பிரதி அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் வசந்த பெரேரா,** பெருந்தோட்ட கைத்தொழில் பிரதி அமைச்சர்

**கௌரவ இந்திக பண்டாரநாயக்க,** வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரதி அமைச்சர்

**கௌரவ தாராநாத் பஸ்நாயக்க,** தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ ரன்ஜன் ராமநாயக்க,** சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி பிரதி அமைச்சர்

**கௌரவ இரான் விக்கிரமரத்ன,** அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ துலீப் விஜேசேகர,** தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்,** விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர்

---

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன**

**கௌரவ சிசிர குமார அபேசேகர**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ திளும் அமுணுகம**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ டலஸ் அழகப்பெரும**

**கௌரவ ஆனந்த அலுத்கமகே**

**கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே**

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி**

**கௌரவ நாலக்க பிரசாத் கொலொன்னே**

**கௌரவ சந்திரசிறி கஜதீர**

**கௌரவ சந்திம கமகே**

**கௌரவ சிறிபால கமலத்**

**கௌரவ உதய பிரபாத் கம்மன்பில**

**கௌரவ நிஹால் கலப்பத்தி**

**கௌரவ தினேஷ் குணவர்தன**

**கௌரவ பந்துல குணவர்தன**

**கௌரவ எட்வட் குணசேகர**

**கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர**

**கௌரவ எஸ். எம். சந்திரசேன**

**கௌரவ சிசிர ஜயகொடி**

**கௌரவ மலித் ஜயதிலக**

**கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ**

**கௌரவ நலின் பண்டாற ஜயமஹ**

**கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன**

**கௌரவ லக்கி ஜயவர்தன**

**கௌரவ பிரேமலால் ஜயசேகர**

**கௌரவ மயில்வாகனம் திலகராஜா**

**கௌரவ சிறினால் டி மெல்**

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா**

**கௌரவ ரீ. ரன்ஜித் த சொய்சா**

**கௌரவ அநுர திசாநாயக்க**

**கௌரவ விமலவீர திசாநாயக்க**

**கௌரவ வீரகுமார திசாநாயக்க**

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா**

**கௌரவ முஹமட் நவவி**

**கௌரவ வாசுதேவ நாணாயக்கார**

**கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்**

**கௌரவ புத்திக பத்திறண**

**கௌரவ கே.கே. பியதாஸ**

**கௌரவ சனத் நிசாந்த பெரேரா**

**கௌரவ அசோக்க பிரியந்த**

**கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர**

**கௌரவ பந்துல லால் பண்டாரிகொட**

**கௌரவ தாரக்க பாலசூரிய**

**கௌரவ எஸ்.எம். மரிக்கார்**

**கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா**

**கௌரவ கே. காதர் மஸ்தான்**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ அப்துல்லா மஹரூப்**

**கௌரவ அஜித் மான்னப்பெரும**

**கௌரவ திலக் மாரபன**

**கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க**

**கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரன**

**கௌரவ பிமல் ரத்நாயக்க**

**கௌரவ பிரசன்ன ரணவீர**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ ஹர்ஷன ராஜகருணா**

**கௌரவ சமல் ராஜபக்ஷ**

**கௌரவ காமினி லொக்குகே**

**கௌரவ விதுற விக்கிரமநாயக்க**

**கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன**

**கௌரவ ஏ.ஏ. விஜேதுங்க**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன**

**கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன**

**கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ கஞ்சன விஜேசேகர**

**கௌரவ ஹேஷான் விதானகே**

**கௌரவ சி. சிறீதரன்**

**கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ சந்தித் சமரசிங்க**

**கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்**

**கௌரவ (டாக்டர்) சி. சிவமோகன்**

**கௌரவ சிவசக்தி ஆனந்தன்**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ மாவை சோ. சேனாதிராசா**

**கௌரவ செஹான் சேமசிங்க**

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி**

**கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி**

**கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பாராளுமன்ற பிரதிச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

1. ***சபாநாயகரின் அறிவித்தல்கள்:*** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தார்,—

**I**

“இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 79 ஆம் இலக்க உறுப்புரையின் பிரகாரம், “ஆட்களைப் பதிவுசெய்தல் (திருத்தம்)” எனும் சட்டமூலத்தில், 2016 யூலை மாதம் 07 ஆம் திகதி என்னால் சான்றுரை எழுதப்பட்டதென்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.”

**II**

“2015 திசெம்பர் மாதம் 19 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பிரேரணையின் 8 (ஈ) மற்றும் (உ) பந்திகளின் பிரகாரம் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சிறினால் டி மெல் அவர்களை வலுச்சக்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கி பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க அக்குழுவில் சேவையாற்றுவதற்கு தெரிவுக்குழுவினால் பெயர்குறிப்பிட்டுள்ளார் என்பதனை சபைக்கு அறிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.”

**III**

“2015 திசெம்பர் மாதம் 19 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பிரேரணையின் 8 (ஈ) மற்றும் (உ) பந்திகளின் பிரகாரம் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க அவர்ளை உற்பத்திகளும் சேவைகளும் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கி பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சிறினால் டி மெல் அக்குழுவில் சேவையாற்றுவதற்கு தெரிவுக்குழுவினால் பெயர்குறிப்பிட்டுள்ளார் என்பதனை சபைக்கு அறிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.”

**IV**

“அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவிலிருந்து கேட்டுவிலகிய பாராளுன்ற உறுப்பினர் கௌரவ வேலு குமார் அவர்களின் இடத்திற்கு 129(இ) ஆம் இலக்க பாராளுன்ற நிலையியற் கட்டளைக்கமைய பாராளுன்ற உறுப்பினர் கௌரவ சுஜீவ சேனசிங்க அக் குழுவில் சேவையாற்றுவதற்கு தெரிவுக்குழுவினால் பெயர் குறிப்பிட்டுள்ளார் என்பதனை சபைக்கு அறிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.”

**2. பத்திரங்கள் சமர்ப்பணம்:** (1) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(3) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2013 ஆம் ஆண்டுக்கான இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டு அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை சுகாதாரம் மற்றும் மனித சேமநலம், சமூக வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2013 - 2014 ஆம் ஆண்டுக்கான கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்டின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை வியாபாரம் மற்றும் வணிகம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்:** (1) சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ ரன்ஜித் அலுவிஹாரேயினால் சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட சப்பிரகமுவ மாகாண சுற்றுலா அதிகாரசபையின் கொள்கைக் கட்டளைச் சட்டம் தொடர்பில் அத்துறைசார் மேற்பார்வைக் குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ அஜித் மானப்பெருமவினால் சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட "மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டி நெறிகள்" , " நீதித்துறை சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்" மற்றும் " குற்றவியல் விடயங்களின் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி" ஆகிய விடயங்கள் தொடர்பில் அத் துறைசார் மேற்பார்வைக் குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4 மனுக்கள்:**

(1) (i) றாகம, வெலிசர, வெலின்டன் பார்க், இல. 90/16 இல் வதியும் திரு, டென்சில் லலித் அபேசூரியவினது 2016.05.16 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) இரத்தினபுரி, முவகம, ஹேமானந்த மாவத்தை, இல. 28/9 இல் வதியும் திருமதி என்.எல். சந்திரசேகரவினது 2016.06.06 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) தம்பலகமுவ, கோவில்அடியில் வதியும் திருமதி பத்மநாதன் ஜெயமாலினியினது 2016.05.03 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iv) ராஜகிரி, ராஜகிரி பூங்கா, இல. 615/26 இல் வதியும் திரு. ரொஹான் பொன்னையாவினது 2016.05.16 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(v) பதவி ஸ்ரீபுர, இல. 1721/பீ யில் வதியும் செல்வி எஸ்.எம்.சீ. தில்ருக்சி சோமபாலவினது 2016.06.07 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(vi) கந்தளாய், வென்ராசன்புர, இல. ஆர் - 96, யுனிட் - 16 இல் வதியும் திரு. எஸ்.எம். ஹீன்பண்டாவினது 2016.05.18 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(vii) நுகேகொட, கங்கொடவில, பெபிலியான வீதி, இல. 43 இல் வதியும் திரு. டப்ளியூ.ஏ.டி. சிரிவர்தனவினது 2016.05.18 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(viii) ஹரன்கஹவ, ஹுரிஹெலபதன, ஹுரிஹெலபதன பிரைவேற் லிமிட்டெட்டில் வதியும் திரு. வாசுதேவன் இராசையாவினது 2016.05.16 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

கௌரவ சுசந்த புஞ்சிநிலெமே சமர்ப்பித்தார்.

(2) (i) காலி, கலேகான, கம்சபா வீதி, இல. 2/18 இல் வதியும் திரு. அமரபந்திர குணசேகரவினது 2016.05.22 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) தங்காலை, சிட்டினமலுவவில் வதியும் திரு. பேர்ட்டி குமாரப்பெருமவினது 2016.05.08 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) மஹரகம, பன்சல வீதி, முதலாம் ஒழுங்கை, இல. 31/22 இல் வதியும் திரு. ஜே.எம்.டி. விஜேவீரவினது 2016.06.22 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iv) பத்தரமுல்ல, லேக் வீதி, இல. 160/47இல் வதியும் செல்வி கே. திசாநாயக்கவினது 2016.05.26 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(v) அம்பலாந்தோட்டை, மானஜ்ஜாவ, ஹைட்ராமணி இல்லம், இல. 23 இல் வதியும் திரு. ரஞ்சித் சமரவிக்கிரமவினது 2016.05.31 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(vi) நாகுலுகமுவ, குடாவெல்ல வடக்கு, "ஆனந்த" வில் வதியும் திரு. டப்ளியூ.ஜி.எம்.எம்.என். லக்ஷிதவினது 2016.04.21 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ நிஹால் கலப்பத்தி சமர்ப்பித்தார்.

(3) (i) வெலிகம, மஹவீதிய (பரண கடே), இல. 267/2 இல் வதியும் திரு. எம்.எச். இப்ஹாமினது 2016.05.09 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) நுகேகொட, பாகொட, 1 ஆம் குறுக்கு வீதி, இல. 52/2 இல் வதியும் திரு. ஜே.சீ.எல். பண்டாரவினது 2016.02.01 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) பாணந்துற, வேகட, ஹொரண வீதி, இல. 297 இல் வதியும் திரு. கே. யூ.ஆர். பர்னாந்துவினது 2016.05.14 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iv) மாத்தறை, நாதுகல, நாதுகல சந்தி, "காந்தி" யில் வதியும் திருமதி காந்தி சமரசிங்க குணசேகரவினது 2016.04.30 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(v) கோட்டகொட, லுணுகலப்புவ வீதியில் வதியும் திரு. எல்.எச். சிரிசேனவினது 2016.04.26 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி சமர்ப்பித்தார்.

(4) (i) பொலன்னறுவ, தம்பால, அல்ஹிலால்புர, இல. 106/01 இல் வதியும் திரு. எம்.எச். மொஹமட் அலியினது 2016.03.07 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) மெதிரிகிரிய, புதிய நகரம், யாய 06, இல. 18/2 இல் வதியும் திரு. டப்ளியூ.எம்.பி.பீ. வீரசிங்கவினது 2016.05.30 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ அநுர சிட்னி ஜயரத்ன சமர்ப்பித்தார்.

(5) (i) கம்புறுபிட்டிய, கரபுட்டுகல, திக்கஹ கொரடுவவில் வதியும் திரு. டி. விக்டர் ரத்னாயக்கவினது 2016.05.24 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) கிரின்த புஹுல்வெல்ல, பஹல அரம்பவில் வதியும் திருமதி எச்.எச். சுவர்ணாவினது 2016.05.11 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) மிரிஸ்ஸ, உடுபில, ‘‘கஸ்தூரிகெவத்த’’ வில் வதியும் திருமதி கே.கே. பியவதீயினது 2016.05.17 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iv) பொல்கஸ்ஓவிட்ட, வேத்தர, இசுரு உயன, இல. 55/ஏ/14 இல் வதியும் செல்வி லக்மாலி லியனகேயினது 2016.05.11 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(v) அகுரஸ்ஸ, மாரம்ப, கங்ஹல வீதி, ‘‘ரணசிரி’’ யில் வதியும் திரு. பாலித ரணசிங்கவினது 2016.05.25 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(vi) மாத்தறை, கொம்பத்தல, கொடெல்லவத்த, ‘‘திலங்கா’’ வில் வதியும் திருமதி திலகா ரணவீரவினது 2016.04.03 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(vii) அகுரஸ்ஸ, மலிதுவ, வெலிகெட்டியவில் வதியும் திரு. டப்ளியூ.எச். மர்சியனினது 2016.05.25 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(viii) மாத்தறை, வல்கம, பிரகதி மாவத்தை, இல. 40 ஏ யில் வதியும் திரு. டப்ளியூ.கே. விஜேசிங்கவினது 2016.05.27 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

கௌரவ புத்திக பத்திறண சமர்ப்பித்தார்.

25அ ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய மேற்படி மனுக்கள் பொது மனுக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

(மு.ப. 10.57 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார். )

**5. சேர்பெறுமதி வரி (திருத்தம்):** நிதி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்:

சட்டமூலம் 2016 யூன் மாதம் 20 ஆம் திகதி புதன்கிழமை இரண்டாவது முறையாக மதிப்பிடப்படவேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் அச் சட்டமூலம் உரிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**6. பாராளுமன்ற அலுவல்கள்:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— இன்றைய தினம் அரசாங்க அலுவல்கள் முன்னீடடையுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. பாராளுமன்ற அமர்வு**: பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2016, யூலை மாதம் 20 ஆம் திகதி, புதன்கிழமை பி.ப. 1.00 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. குற்றவியல் விடயங்களின் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி:** நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சருமானவர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க குற்றவியல் விடயங்களின் போது பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2015 ஆகஸ்ட் மாதம் 6 ஆம் திகதிய 1926/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(பி.ப. 1.30 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்)

"கௌரவ எட்வட் குணசேகர தலைமை தாங்குவாராக" என மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.55 மணிக்கு கௌரவ எட்வட் குணசேகர தலைமை தாங்கினார். )

"கௌரவ லக்கி ஜயவர்தன தலைமை தாங்குவாராக" என பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.04 மணிக்கு கௌரவ லக்கி ஜயவர்தன தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்**: நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சருமானவர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டத்தின் 45 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 1954/34 ஆம் இலக்க 2016 பெப்புருவரி மாதம் 18 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.03.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**10. மத்தியஸ்த சபை (திருத்தச்) சட்டமூலம்**: இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என நீதி அமைச்சரும் புத்தசாசன அமைசருமானவர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் அதன் பிரகாரம் இரண்டாவது முறையாக மதிப்பிடப்பட்டது.

“சட்டமூலம் முழுப்பாராளுமன்ற குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக” என நீதி அமைச்சரரும் புத்தசாசன அமைச்சருமானவர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுநிலையில்)

தலைமை தாங்கும் உறுப்பினர் தலைமை தாங்கினார்.

1 முதல் 3 வரையான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

**சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:**

“சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும்” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

“சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப் பெறுமாக” என நீதி அமைச்சரரும் புத்தசாசன அமைச்சருமானவர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**11. ஒத்திவைப்பு:** “இப் பாராளுமன்றம் இப்போது ஒத்திவைக்கப்படுமாக” என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பி.ப. 5.25 மணிக்கு இன்றைய தின சபைத் தீர்மானத்திற்கு ஏற்ப, 2016 யூலை மாதம் 20 ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 1.00 மணி வரை பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.